DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 13/2021**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **செல்லபாப்பா** | Caste | : | |
| Husband Name | : | **சேகர்** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **25.02.2026.**

**PW - 17**

**(1** முதல் **3** எதிரிகள் ஆஜர்**)**

**முதல் விசாரணை**

நான் திருச்சி மாவட்டம், இலால்குடி தாலுக்கா, பெருவளநல்லூரில் குடியிருக்கிறேன். எங்களிடம் முதலில் கறவை மாடு இருந்தது. என் கணவர் இறந்தபிறகு கறவை மாடு இல்லை. ஆஜர் 1 முதல் 3 எதிரிகளை தெரியும். இந்த வழக்கில் இறந்துபோன பெரியசாமியை தெரியும். அவர் இறந்த சமயத்தில் என் பேத்தியுடன் மருத்துவமனையிலிருந்தேன். அவர் எப்படி இறந்தார் என்று தெரியாது. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

*(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)*

<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>

போலிசார் என்னை விசாரித்தபோது, இளம் சிறார் பாரதிராஜா எங்கள் வீட்டிற்கு பால் கறக்க வந்தார் என்றால் இல்லை. 19.01.2020 அன்று காலை 05.00 மணியளவில் இளம் சிறார் பாரதிராஜா எனது வீட்டில் சைக்கிளை வைத்துவிட்டு புள்ளம்பாடி வாய்க்கால் பக்கம் போனார் என்றால் சரியல்ல. 2 ஆம் எதிரி கவியரசனும், இளம் சிறாரை தேடி அங்கு வந்துவிட்டு, அவரும் வாய்க்கால் பக்கம் போனார் என்றால் சரியல்ல. சிறிது நேரம் கழித்து இளம்சிறார் பாரதிராஜா திரும்ப வந்து பதட்டத்துடன் பாலை கறந்துவிட்டு, எடுத்துக் கொண்டு சென்றார் என்றால் சரியல்ல. பின்பு பெரியசாமி கொலை செய்யப்பட்டு வாய்க்காலில் மிதந்து வந்தார் என்று கேள்விபட்டேன் என்றால் சரியல்ல. பெரியசாமி கொலை சம்பந்தமாக எதிரிகளை போலிசார் கைது செய்தார்கள் என்று கேள்விபட்டேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு பயந்து கொண்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் இந்த சாட்சியிடம் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.